DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.10.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காக்கலனி கிராமத்தில் வசித்து வருகிறேன். அய்யப்பன் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார். அவர் விசாரணை செய்யும் போது நான் ஊரில் இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னேன். கீழ்வேளூர் காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போன அய்யப்பனை எனக்கு தெரியும் என்றும், அவர் 27.03.2021ம் தேதி இரவு 7.00 மணியளவில் வீட்டை விட்டு சென்றவர் ரஜிபானி வீட்டிற்கு பின்னால் தூக்கில் தொங்கி கொண்டு இருப்பதாக கடை தெருவில் பேசி கொண்டு இருந்தார்கள் அதனால் நானும் எனது ஊர்காரர்களும் சென்று பார்த்தோம் என்றும், அங்கு

போர்வையில் கருவை மரத்தில் தூக்கு போட்டு தொங்கி கால் மடக்கிய நிலையில் அய்யப்பன் இருந்ததால் அவருடைய இறப்பில் சந்தேகம் அடைந்து அவர் தந்தையார் புகார் அளித்தார் என்றும், இது சம்மந்தமாக கீழ்வேளூர் ஆய்வாளர் ரெஜிபானி வீட்டிற்கு பின்னால் கருவை மரத்தில் தொங்கி கொண்டிருந்த அய்யப்பன் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் அதனை பின்னிட்டு ரெஜிபானியும், கௌதமியும் ஆகிய இருவரும் தான் கொலை செய்தார்கள் என்றும் அவர்களை கைது செய்து அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்த போது நானும் அங்கு கூட இருந்தேன் என்று சொல்லிவிட்டு எதிரிகள் கேட்டு கொண்டதால் எனக்கு எதுவும் தெரியாது என்றும், எதிரிகளை தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.